IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியத்தில் காணலாகும் சிறுகதைக் கூறுகள்

**MASILAMANI.M**
Research scholar
Department of tamil
Karpagam academy of higher education

**Dr.P.Thamilarasi**
Sr.Professor
Department of tamil
Karpagam academy of higher education

**Dr.R.Vanitha**
Assistant Professor

*Abstract:* This study explores the presence of short story elements in Sangam literature, one of the earliest forms of Tamil literary expression. Storytelling has long been an integral part of human culture, serving as a means of communication, entertainment, and emotional expression. Sangam texts such as *Akananuru*, *Kurunthogai*, *Natrinai*, and *Kalithogai* reveal significant features of short stories, including plot, characters, dialogue, and vivid situational depiction within a concise poetic structures.

The short story as a formal literary genre emerged in the modern era, particularly in Western literature and its fundamental elements can be traced back to ancient Tamil Sangam poetry. This paper analyses the selected poems to highlight the ways they encapsulate the complete narrative experiences in a brief format. Themes such as love, relationships, social values, emotional conflicts, and moral reflections are presented through engaging and thought-provoking mini-narratives.

The study also illustrates the process that the Sangam poems function as a "time mirror," reflecting the lifestyle, cultural practices, and ethical values of ancient Tamil society. Through selected examples, the paper demonstrates that these poems possess the essential qualities of modern short stories brevity, intensity, and the ability to provoke deep reflection in which it establishes the continuity of the storytelling traditions from ancient to modern times.

## சங்க இலக்கியத்தில் காணலாகும் சிறுகதைக் கூறுகள்

### முன்னுரை :

காலம்காலமாகக் கதை சொல்வதும், கதை கேட்பதும் எல்லா மக்களிடையேயும் மரபாக இருந்து வந்திருக்கிறது. மக்கள் ஓய்வு நேரங்களில் சக மனிதர்களிடம் தொடர்பு கொள்வதற்கும் குடும்ப உறவுகளுடன் நேரம் செலவிடவும் கதை கூறும் மரபினை கையாண்டு வந்துள்ளனர். சங்க இலக்கியங்களில், குறிப்பாக அகநானூறு, குறுந்தொகை மற்றும் நற்றிணை போன்ற அகத்திணைப் பாடல்களில் சிறுகதைக்கான கருப்பொருள், கதைமாந்தர், உரையாடல், மற்றும் விறுவிறுப்பான சூழல் சித்தரிப்பு போன்ற கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. இவை தலைவன்-தலைவியின் காதல், தோழியின் கூற்று, செவிலித் தாயின் கவலை போன்ற செறிவான உணர்வுகளுடன், சிறிய கதை வடிவில் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். சங்க இலக்கியப் பாடல்களில் சில பாடல்களை மட்டும் எடுத்துக்கொண்டு, சங்ககால மக்களின் வாழ்வியல் குறித்த சிறுகதைக் கூறுகளைக் கொண்டு நவீன ஆய்வுக்கட்டுரைக்கான உரிய செழுமையுடன், மிகச் சுருக்கமாகத் தொகுத்து, சங்ககால மக்களின் வாழ்வினை காட்டும் காலக்கண்ணாடியாக இக்கட்டுரை அமைகிறது.

### சிறுகதைகள் என்பது :

சிறுகதை என்ற தனி இலக்கியம் உலகில் முதன்முதலாக அமெரிக்காவில் தோன்றியது. பின்னர் உலகம் முழுவதும் பரவியது. மேனாட்டவர் வருகையால் தமிழகத்தில் சிறுகதைகள் நுழைந்தது. , அன்றாடம் நிகழும் ஒரு நிகழ்ச்சி அல்லது ஓர் உணர்ச்சியை மையமாகக் கொண்டு பின்னப்படுவது ஆகும். குதிரைப் பந்தயம் போன்று விறுவிறுப்பாகவும் சுவையாகவும் விரைவாகவும் அமைய வேண்டும் "ஒரே மூச்சில் படித்து, நீண்ட காலம் சிந்திக்கும்படியான உணர்வை அளிக்கும் இலக்கியப் படைப்பாக இருக்க வேண்டும் .

. கிபி 18 ஆம் நூற்றாண்டிலேயே சிறுகதைகள் தோன்றின. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழ் இலக்கியத்தின் பரப்பிலும் வடிவத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. உலக இலக்கியத்தில் அமெரிக்க எழுத்தாளர்களான எட்கார் ஆலன் போ, ஓ.ஹென்றி இருவரையும் சிறுகதையின் தொடக்கப் புள்ளிகளாகச் சொல்வது வழக்கம். ஆனால் சிறந்த வடிவம் கொண்ட சிறுகதைக்கு ஆண்டன் செக்காவ் தான் முன்னோடி என்பார்கள்.

தமிழில் அச்சுப்பொறியின் பயன்பாட்டாலும் ஆங்கில மொழியின் செல்வாக்கினாலும் தமிழ் சிறுகதைகள் வழக்கில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்றாலும் பாரதியார் தான் சிறுகதை வடிவத்தை தமிழுக்குக் கொண்டு வந்தார் என்று கூறுவோரும் உண்டு. ஆயினும் சிறுகதைக் கூறுகள் நம் சங்ககாலப் பாடல்களிலே காணப்படுகின்றது என்பதனையும் கதை சொல்லும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்த வழக்கம் என்பதனையும் தொல்காப்பியரின்,

**"பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்**
**பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்"**

என்ற வரிகளால் நம்மால் உணரமுடியும். பின்வரும் சில சங்கப் பாடல்களை அதற்கானச் சான்றுகளாகக்காணலாம்.

நல்ல திணை என்றழைக்கப்படும் நற்றிணை 172 -வது பாடலான

விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே...............

என்ற பாடல் நமக்கு ஒரு அழகிய சிறுகதையை முன்வைக்கிறது. தலைவன் தலைவி இருவரும் களவுக் காலத்தில் சந்திக்கும் இடம் குறித்த உரையாடல் நிகழ்கிறது, அருகே உள்ள புன்னைமரம் சிறந்த இடம் என தலைவன் உரைக்க, அது எனக்கு உடன் பிறந்தவள் போன்றது, நான் அதற்கு பாலையும், தேனையும் ஊற்றி வளர்த்து வந்தேன், இப்போது அது மரமாக நிற்கிறது, என் உடன்பிறந்தார் முன், நான் எப்படி உன்னோடு உறவாட முடியும்? என்று கூறி தலைவி மறுக்கிறாள். இதைப் படிக்கும் நமக்கு பழந்தமிழர் வாழ்வில் உறவுகளின் உன்னத நிலையை உணர்வதோடு, சிறுகதை என்பது உடனே முடியக்கூடியதாக இருப்பதோடு மட்டுமின்றி நம் சிந்தனையைக் தூண்டுவதாகவும் அமைந்துள்ளது. இயற்கையையும் தன் உறவாக எண்ணி வாழ்ந்தார்கள், களவு ஒழுக்கத்தைச் சுட்டிக்காட்டி உறவுகளின் உன்னத நிலையை சிந்திக்க வைக்கும் சிறுகதையாகவும் உள்ளது.

அதேபோல "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்றும் கல்விவல்லார் கண்ட கலி என்றும் பலராலும் பேசப்படும் அழகிய கலித்தொகைப் பாடலான

சுடர்த்தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரி பந்து கொண்டு ஓடி,
நோ தக்க செய்யும் சிறுபட்டி, மேல் ஓர் நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே! ............... (5)

தலைவி, தன் தோழியிடம் தலைவனைக் கண்ட நிகழ்வைக் கூறுவதாக அமைந்த அழகிய சிறுகதைக் கூறுகளை உள்ளடக்கிய பாடல். அன்று ஒருநாள், தலைவியும், தாயும் வீட்டில் தனியாக இருக்கும் வேளையில், யாரோ ஓர் இளைஞன் தனக்கு தாகமாக இருக்கிறது சிறிது தண்ணீர் கொடுங்கள் என்று கூறினான். தாய் பொன் செம்பில் தண்ணிரை கொண்டுபோய்க் கொடுக்குமாறு தலைவியிடம் கூறினாள். தண்ணிரை கொண்டு சென்று கொடுக்கும் வேளையில் அவனோ, செம்பினை பற்றாது கையை பற்ற, தலைவி அம்மா என்று அலற, தாய் பதறி வந்து என்ன? என்று வினவ, அவனை அறிந்த தலைவி உண்ணும் நீர் விக்கினான் எனக் கூறி காட்டிகொடுக்க மறுக்கிறாள். தாய் அவன் பிடரியை நீவினாள், தலைவன், தலைவியை கேலியாக நோக்கி சிரித்தான். இப்பாடலை படிக்கும் வாசகனுக்கு ஒரு நல்ல சிறுகதையைக் படித்த எண்ணம் உண்டாவது தவிர்க்க இயலாது. அவன் வரும் நிகழ்வும் உரையாடலும் ஒரு சிறுகதையைப் படிப்பது போன்ற தோற்றத்தை நமக்கு உண்டாக்குவதையும் மறுதலிக்க இயலாது.

தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதல் குறித்து குடும்பத்தினர் அறிந்து கொள்கின்றனர். தலைவி இச்செறிப்பு செய்யப்படுகிறாள் தலைவியைக் காணாத தலைவன் தலைவியை திருமணம் செய்து கொள்வதற்காக வீட்டை விட்டு வரச் சொல்லி உடன்போக்கிற்கு அழைத்துச் செல்கிறான். தலைவியோ மண்மகள் அறியா வண்ணச்சீரடி கொண்டவள் தலைவனோ போர்வீரன் தலைவியை வீட்டைவிட்டு அழைத்துச் சென்றுவிட அவளைத் தேடி செவிலித் தாய் போகிறாள். அவள் போகும் வழி கடினமானது வழியில் சிலரை சந்தித்து ஒரு அழகிய பெண்ணும் ஆணும் இவ்வழியே சென்றாரோ என வினவ

பல உறு நறும் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலை உளே பிறப்பினும் மலைக்கு அவை தாம் என் செய்யும்?
நினையுங்கால் நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
சீர்கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை...................

என்று செவிலித் தாய்க்கு அறிவுறுத்தும் விதமாக பொருட்கள் எங்கு வேண்டுமானாலும் விளையலாம், பிறக்கலாம் ஆயினும் அவை பயன்படுத்தப்படும் வகை கொண்டே மதிப்புப் பெறுகின்றன. ஆகவே பெண்கள் எங்கு பிறந்தாலும் கணவனோடு சேர்ந்து இல்லற வாழ்வைத் துய்க்கும் போது தான் இன்னார் என்று போற்றப்படுகிறார்கள் என்பதை மலையில் சந்தனம் பிறந்தாலும் அவை மலைக்குப் பெயர்பெற்றுத் தருவதில்லை, அதனை பூசுவோருக்குத் தான்

பெருமை தருகின்றன என்றும், முத்துக்கள் அணிபவர்களுக்கு அழகைத் தருகின்றனவே தவிர கடலுக்கு பெருமை தருவதில்லை என்பவை கூறி, உம்முடைய மகள் கணவனோடு சேரும் போது தான் அவள் சிறப்புறுகிறாள் அதாவது. தலைவி உம்மால் (செவிலி/பெற்றோர்) பெற்றெடுக்கப்பட்டாலும், அவள் காதலித்து கரம் பிடித்த கணவனுக்கு (தலைவனுக்கு) இன்பம் அளிப்பவளாகத் தான் இருப்பாள். பெற்றோருக்கு அவள் சந்தனம் போன்றவள் (மகிழ்ச்சி தருபவள்), ஆனால் அவள் பயன் கொள்வது தலைவன் தான் எனவே தேடவேண்டாம் என்று அறிவுறுத்துகின்றனர்.

காதல் குறித்து மட்டும் பேசாது காதல் கொண்ட தலைவன் தன் காதல் நிறைவேற என்னவெல்லாம் செய்கிறான் என்பதையும் சில சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அதில் குறிப்பாக மடல் ஏறுதல் குறித்த பாடல் ஒன்றை நாம் கட்டுரைக்காகக் காணலாம்.

கண்டவிர் எல்லாம் கதுமென வந்து, ஆங்கே,
பண்டு அறியாதீர் போல நோக்குவீர்; கொண்டது
மா என்று உணர்மின்; மடல் அன்று: மற்று இவை
பூ அல்ல; பூளை, உழிஞையோடு, யாத்த
புன வரை இட்ட வயங்கு தார்ப் பீலி...............

என்ற கலித்தொகையின் 140 ஆவது பாடலில் என்னைக் கண்டவர்களே! எல்லாரும் திடீரென இங்கே வந்து முன்பு பார்க்காதவர் போலப் பார்க்கிறீர்கள். நான் ஏறியிருப்பது குதிரை என உணர்ந்து கொள்ளுங்கள். வெறும் பனைமட்டை அன்று. எனத் தொடங்கும் பாடலானது தலைவி மீது காதல் கொண்டுள்ள தலைவன், மணமுடிக்க இயலாத சூழலில், ஊர்மக்கள் தன் காதலினை அறியும் விதமாக மடலேறுகிறான். ஊர்மக்களும் அப்பெண்ணை அவனுக்கு மணம் முடித்து வைக்க பெற்றோரிடம் பரிந்துரைக்கின்றனர். திருமணம் நிகழ்கிறது. சங்ககாலத்தில் திருமணம் செய்வதற்காக இளைஞர் மேற்கொள்ளும் செயல்கள் எவ்வாறு இருந்தன என்பதைக் காட்டும் ஒரு சிறுகதைப்போல் சுருக்கமாகவும் சிந்தனையை தூண்டுவதாகவும் அமைந்துள்ளது.

முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே. ...........

மேற்கண்ட பாடலானது, தமிழர்களின் இல்லற வாழ்வில் பெண்கள் தங்களை எவ்வாறாக அர்ப்பணித்துக்கொண்டு வாழ்ந்தார்கள் என்பதைக் காணலாம். செல்வந்தர் வீட்டுப் பெண்ணான தலைவிக்கு, சமைத்துப் பழக்கமில்லை. "அவளுக்குச் சமைக்கத் தெரியாதே! அவள் என்ன செய்கிறாளோ? எப்படிக் குடும்பம் நடத்துகிறாளோ?" என்று வருத்தம் கொள்ளும் தாயின் துயர்துடைக்க, செவிலித்தாய் தலைவி இருக்கும் வீட்டிற்குச் சென்று தலைவியைக் காணும் வேளையில் அங்கு, தலைவி திருமணத்திற்குப் பிறகு தன் வீட்டில் உள்ள பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டும், தனக்குத் தெரிந்த சமையல் அறிவைக் கொண்டும், மோர்க்குழம்பு செய்வதையும், தலைவி மைதீட்டிய கண்களில் தாளிப்பின் புகை நிறைய, தயிர் பிசைந்த கையை ஆடையில் துடைத்துக்கொண்டு விரைவில் சமைக்க வேண்டுமென்று சமைத்த மோர்க்குழம்பைத் தன் கணவனுக்கு அவள் அன்போடு பரிமாறும் காட்சியையும், "நீ சமைத்த மோர்க்குழம்பு மிகவும் இனிமையாக இருக்கிறது" என்று சொல்லி மகிழ்ச்சியோடு கணவன் உண்ணுவதையும், கணவனின் பாராட்டுதலைக் கேட்ட தலைவி புன்முறுவல் பூப்பதையும் பார்த்த செவிலித்தாய் அந்தக் காட்சியைத் தலைவியின் தாயிடம் கூறுகிறாள். தன் மகள் இல்லறத்தை நல்லறமாக யாதொரு தடையும் இன்றி நடத்தி இனிது வாழ்வதை அறிந்து தாய் அகமகிழ்கிறாள். இவ்வாறு பெண்கள் தங்கள் குடும்பங்களுக்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துப் பெண்ணினத்திற்கே பெருமை சேர்க்கும் விதமாகக் குடும்ப வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்ந்தனர் என்பதைக் காட்டும் காலக் கண்ணாடியாக இப்பாடல் உள்ளது.

**முடிவுரை:**

சங்கால பாடல்களில் ஐந்து பாடல்களை மட்டும் எடுத்துக்கொண்டு பார்க்கையில் அவற்றில் சிறுகதைக்கான கூறுகள் நிறைந்து ஒவ்வொரு பாடல்களும் படிப்பவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் சுருக்கமானதாகவும் சிறுகதைகள் போலவே விரைவில் படித்துமுடிக்கக்கூடியதாகவும், சிந்தனையை தூண்டுவதாகவும், ஒரு கருத்தினை வெளிப்படுத்துகிறது. சங்ககாலத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.